**O.S.No. 19/2018**

**DW 1: தனலட்சுமி** தேதி 30.01.2026

பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை பத்திரம் எந்த தேதி மாதம் வருடம் ஏற்பட்டது என்றால் தேதி மாதம் ஞாபகத்தில் இல்லை வருடம் 2012. பிவாசாஆ 1 எந்த எந்த சொத்துகள் பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றால் தெற்காலதோட்டம், சக்கிலியன்காடு, பறையன்காடு ஆகியவை பாகப்பிரிவினை செய்யப்பட்டது. வீடு பாகப்பிரிவினை செய்யப்படவில்லை. யார் யாருக்கு என்ன என்ன காடு ஒதுக்கப்பட்டது என்றால் என் அப்பா , பூங்கொடி , தனலட்சுமி, ருக்மணி ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டது. எந்த எந்த சொத்து யார் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் 19.99 ஏக்கரில் 4 ஏக்கரை விட்டு விட்டு மீதி 4 பேருக்கு பிரித்து பாகக்கறார் செய்து கொடுத்துவிட்டார்கள். எங்கள் 4 பேருக்கும் தலா 4 ½ ஏக்கர் பிரித்து கொடுத்தார்கள். என் அப்பாவிற்கு பிரிந்த சொத்தை எனக்கும் என் சகோதரிகளுக்கும் பிரித்து கொடுத்துவிட்டார்கள். அதற்கு என் அப்பா ரூ.1 லட்சம் பெற்று கொண்டார். பிவாசாஆ 1 ல் என் அப்பாவின் பங்கை எனக்கும் என் சகோதரிகளுக்கும் விட்டு கொடுத்துவிட்டதாக வாசகங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது. நான் 2 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு கையெழுத்து மட்டும் போட தெரியும். பிவாசாஆ 1 பத்திரத்தில் எங்கள் அண்ணன் விஜயாபுரி தரப்பினராக இல்லை என்றால் சரிதான். பிவாசாஆ 1 பத்திரத்தை எழுதியவர் யார் என்றால் வளர்மதி என்பவர். அவர் காஞ்சிகோயிலை சேர்ந்தவர். பிவாசாஆ 1 ல் யார் யார் சாட்சி கையெழுத்திட்டுள்ளார்கள் என்றால் சுப்பிரமணி, ஈஸ்வரன் ஆகியோர். சுப்பிரமணி என் கணவர். ஈஸ்வரன் என்

சகோதரி பூங்கொடியின் கணவர். முத்திரை தாள் யார் வாங்கினார்கள் என்றால் பூங்கொடி பெயரில் வாங்கப்பட்டது. அது எவ்வளவு ரூபாய்க்கு வாங்கப்பட்டது என்றால் ஞாபகத்தில் இல்லை. பிவாசாஆ 1 எழுதும் போது என் தந்தைக்கு வயது 93 என்றால் சரிதான். அந்த வயதில் அவர் வெளியில் செல்லமுடியாத நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல. நல்ல நிலையில் வண்டி ஓட்டும் நிலையில் இருந்தார். என் தந்தை 93 வயதில் தான் என்ன செய்கிறோம் என்று தெரியாத நிலையிலும் வெளியில் செல்ல இயலாத நிலையிலும் இருந்தார் என்றால் சரியல்ல. பிவாசாஆ 1 ல் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துகளும் சொல்லப்பட்டுள்ளதா என்றால் வீடு சொல்லப்படவில்லை அது பொதுவில் உள்ளது. பிவாசாஆ 1 ல் வீட்டை குறித்து சொல்லப்படாததற்கு காரணம் என்ன என்றால் என் அப்பா பொதுவில் இருக்கட்டும் என்று சொல்லவிட்டதால் எழுதவில்லை. அவ்வாறு வாசகங்கள் ஏதேனும் பிவாசாஆ 1 ல் கண்டுள்ளதா என்றால் அது எனக்கு தெரியாது. பிவாசாஆ 1 சார்பதிவாளர் அலுவலகத்தில் இன்னார் என்று நிரூபித்தவர் என்ற இடத்தில் ருக்மணியின் கணவர் சண்முகம் கையெழுத்திட்டுள்ளார். அ வ எண் 306/19 (222/10) பெருந்துறை சார்பு நீதிமன்றத்தில் நானும் என் சகோதரிகளும் வாதியாக இருந்து என் அப்பா மற்றும் அண்ணன் மீது வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது பிவாசாஆ 1 எழுத வேண்டிய அவசியம் என்ன என்றால் மேற்படி வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு என் அப்பாவிற்கும் என் அண்ணனுக்கும் சண்டை சச்சரவாக இருந்ததால் நாங்கள் பாகப்பிரிவினை செய்து கொடுக்கும் படி என் அப்பாவிடம் கேட்டதால் என் அண்ணன் மறுத்துவிட்டதால் அதனால் பிவாசாஆ 1 எழுதி கொண்டோம். நான் மேலே சொன்ன விவரம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. பிவாசாஆ 1 ல் என்ன என்ன பத்திரங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் என் அப்பாவிற்குண்டான பூமி பத்திரங்கள்

காட்டப்பட்டுள்ளது என்ன பத்திரம் என்று என்னால் சொல்ல இயலாது. என் அப்பா எங்களிடம் அந்த பத்திரங்களை காட்டவில்லை. பிவாசாஆ 1 ல் என் தந்தைக்கும் அவரது தந்தைக்கும் பாத்தியம் என்று வாசகங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ 1 எழுதும் போது பத்திர எழுத்தரிடம் என்ன என்ன பத்திரங்கள் எத்தனை கொடுத்தோம் என்றால் என்ன என்ன பத்திரங்கள் என்று சொல்லவில்லை நாங்கள் தான் பத்திர எழுத்தரிடம் கொடுத்தோம். பிவாசாஆ 1 எழுதுவதற்கு முன்பாக பஞ்சாயத்து எதுவும் பேசப்பட்டதா என்றால இல்லை. பஞ்சாயத்து பேசியதாக பிவாசாஆ 1 ல் வாசகங்கள் ஏதும் இல்லை. பிவாசாஆ 1 என் அண்ணன் வாதிக்கு ஏதேனும் சொத்து ஒதுக்கப்பட்டதா என்றால் இல்லை. என் அப்பா தரப்பில் எதிர் வழக்குரை 2010 ல் தாக்கல் செய்துள்ளார். பிவாசாஆ 1 எழுதி பிறகு தான் அ வ எண் 222/2010 ல் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என் அப்பா அ வ எண்.222/2010 வழக்கு தாக்கல் செய்த போது ஆதியில் தோன்றா தரப்பினராக இருந்தார் என்றும் பின்னிட்டு பிவாசாஆ 1 எழுதிய பிறகு மேற்படி வழக்கில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து அத்துடன் எதிர் வழக்குரை தாக்கல் செய்திருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. 2011 ல் என் அண்ணன் அ வ எண்.222/10 வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் சரிதான். பின்னிட்டு என் தந்தை மேற்படி எதிர் வாதம் தாக்கல் செய்த பின்னிட்டு 15.2.2015 ல் தள்ளுபடிக்கு விட்டு விட்டோம் என்றால் சரியல்ல. 5.10.2015 ல் மேற்படி வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு அதில் திருத்தல் மனு தாக்கல் செய்ததில் சொத்தின் மதிப்பீடு அதிகமானதால் அவ்வழக்கு திருப்பப்பட்டதில் நாங்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களுடைய வழக்கு கோப்பு காணாமல் போனதால் தேடி எடுக்க காலதாமதம் ஆனது. வாதி தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருப்பதால் தான் மேற்படி வழக்கை தள்ளுபடிக்கு விட்டு விட்டு மீண்டும்

கோப்பிற்கு எடுத்தோம் என்றும் அவரை இடையூறு செய்யும் எண்ணத்தில் அவ்வாறு செய்தோம் என்றால் சரியல்ல. என் தந்தை ரூ.1 லட்சம் வாங்கி கொண்டு அவர் பாத்தியத்தை எங்களுக்கு விடுதலை செய்து கொடுத்து விட்டதாக என் தந்தை தாக்கல் செய்துள்ள அ வ எண்.222/10 எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ வ எண் 222/10 ல் என் தந்தை தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை பாரா 4 ல் அவருடைய மகனுக்கு பிரித்து கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான். அவ்வாறு விஜயாபுரிக்கு பிரித்து கொடுக்கவில்லை என்று சொன்னால் அவர் பிரித்து கொடுக்க முன் வரவில்லை என்பதால் தான் அ வ எண்.222/10 தாக்கல் செய்துள்ளோம். பிவாசாஆ 1 க்கு பின்னிட்டு வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் சட்டத்திற்கு புறம்பாக எங்களுடைய பெயருக்கு மாற்றம் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. பிவாசாஆ 1 மோசடியான பத்திரம் என்றால் சரியல்ல. என் தந்தை நல்ல நிலையில் இல்லாத போது 93 வயதில் தூக்கி கொண்டு சென்று மோசடியாக நாங்களாக பிவாசாஆ 1 ஐ தயாரித்து கொண்டோம் என்றால் சரியல்ல. பிவாசாஆ 1 மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல.